# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040813

1. District மாவட்டம்: Theni District PS காவல்நிலையம்: V&AC, Theni Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: 07/2022 Date நாள்: 14/12/2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20/09/2022, on a day in the month of octo[ber] 2022 last week and on 14/12/[2022] Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 14/12/2022 Time நேரம் : 15-00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 16.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Computer typed Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்: About 35 kms South
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி: Office of the Firka Surveyor, Mayiladumparai Firka, Andipatti Taluk, Theni District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: M. Ramendran (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: Machendran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 1988 (d) Nationality : நாட்டினம்: Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்: Farmer (g) Address : முகவரி: No.6, Muthu Thevar street, Kumanan Thozhu, Andipatti Taluk, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Selvarangan, Firka Surveyor, Mayiladumparai Firka, Andipatti Taluk, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

– Computer typed separate sheet enclosed –

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant — [signature] 14/12/22
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station — [signature] 14/12/2022
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14/12/2022 / 17.30 hrs.

Name: பெயர் C. Jeyapriya
Rank: நிலை Inspector of Police, V&AC, Theni. ....No. எண் ........

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.07/2022-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 14.12.2022-ம் தேதி 15.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, குமணன் தொழு, முத்துத்தேவர் வீதி, எண்-6-ல் வசிக்கும் திரு.மச்சேந்திரன் என்பவரது மகன் திரு.ராமேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்படி முகவரியில் எனது தாய் தந்தையருடன் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நான் MBA வரை படித்துள்ளேன். அப்பா பெயர் திரு.மச்சேந்திரன், அம்மா பெயர் திருமதி.ராமேஸ்வரி. என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு தங்கைகள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசிக்கிறார்கள். எனது அப்பா பெயரில் மயிலாடும்பாறை கிராமத்தில் பூர்விக நிலம் சர்வே எண்.128/2ல் 5 ஏக்கர் 67 செண்ட் நிலமும், சர்வே எண்.128/3ல் 2 ஏக்கர் 43 செண்ட் நிலமும், சென்ற 2007ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது. அதன்படி எனது அப்பா, அம்மா பெயரில் கடன் பெறலாம் என்று எண்ணி, அம்மா பெயரிலும் நிலம் இருக்கட்டும் என்று மேற்படி சர்வே எண்.128/2ல் 1 ஏக்கர் 57 செண்ட் நிலமும், சர்வே எண்.128/3 உள்ள 2 ஏக்கர் 43 செண்ட் முழு நிலமும் ஆக மொத்தம் 4 ஏக்கர் நிலத்தை சென்ற 12.05.2022-ம் தேதி தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.1026/2022) மூலம் தானமாக எழுதி வைத்தார். அன்றைய பதிவின் மூலமே அம்மா பெயருக்கு தனிப்பட்டா பெற மனுவும் கொடுக்கப்பட்டது. பின்னர் எந்த தகவலும் இல்லாததால் வங்கியில் கடன் பெற வேண்டி நான் 20.06.2022ம் தேதி ஆன்லைனில் பட்டா மாறுதல் கேட்டு அம்மா பெயரில் விண்ணப்பம் செய்தேன். அதனைப் பார்த்த மயிலாடும்பாறை வி.ஏ.ஓ முதலில் ஒரு நம்பருக்கு உட்பிரிவு முடியட்டும், பின்னர் மற்றொரு நம்பரிலுள்ள முழு புலத்திற்கும் சேர்த்து மொத்தமாக பெயர் மாற்றம் செய்து பட்டா வாங்கலாம் என்று சொல்லி 09.09.2022-ல் எனது விண்ணப்பத்தை மண்டல துணை வட்டாட்சியர் மூலம் தள்ளுபடி செய்து விட்டார்கள். அதுபற்றி நான் ஆன்லைனில் பார்த்த போது அம்மா பெயரிலான பத்திரம் பதிவு செய்த 12.05.2022 அன்று கொடுத்த விண்ணப்பம் உட்பிரிவிற்காக பிர்கா சர்வேயரிடம் நிலுவையில் இருந்தது தெரிய வந்தது. அதன்படி நான் மயிலாடும்பாறை சென்று எங்களது கிராம சர்வேயர் திரு.செல்வரங்கன் அவர்களை 26.09.2022ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு பார்த்து எனது அம்மா பெயரிலான பத்திரத்தை காண்பித்து அந்த நிலத்திற்கு உட்பிரிவு விண்ணப்பம் பற்றி கேட்டேன். அதற்கு அவர்

உங்களின் விண்ணப்பம் நீண்ட நாளாக நிலுவையில் உள்ளது, யாரும் வரவில்லை, ஒரே குடும்பத்திற்குள் தான் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்ய வேண்டும். அதனை உடனே போட்டுக் கொடுத்து விடுகிறேன். அதற்கு ரூ.15,000/- செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார் இவ்வளவு கேட்கிறீர்கள் கவர்மெண்ட்டுக்கு கட்டணுமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னய்யா உனக்கு விபரம் தெரியாதா இந்தப்பணம் உங்கள் அம்மா பெயருக்கு வந்த நிலத்தை அளந்து உட்பிரிவு செய்து தனி பட்டா வழங்க ஏற்பாடு செய்ய எனக்காகும் செலவு என்றார். அதற்கு நான் என்னால் அவ்வளவு முடியாது ஏற்கெனவே விவசாயத்தில் ஒன்றுமில்லை பால் மாட்டை வைத்து குடும்பத்தை நடத்தி வருகிறோம் என்று கஷ்டத்தைச் சொல்லி குறைக்கச் சொன்னேன். அதற்கு அவர் நான் குறைத்து தான் சொல்லியிருக்கிறேன். இதற்கு மேல் குறைக்க முடியாது என்று சொன்னார். சரி என்று நானும் வந்து விட்டேன். பின்னர் விவசாய வேலைகள் அதிகம் இருந்ததால் அதைப் பார்த்துவிட்டு சென்ற அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் ஒரு நாள் காலை சுமார் 11.00 மணிக்கு மயிலாடும்பாறை சென்று சர்வேயரை பார்த்து அம்மா ராமேஸ்வரி பெயரிலான உட்பிரிவு விண்ணப்பம் பற்றி கேட்டேன். அதற்கு அவர் நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.15,000/- ரெடி பண்ணி விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் மிகவும் சிரமாக உள்ளது என்றேன். அதற்கு அவர் பணம் ஏற்பாடு செய்து வாருங்கள் முடித்துவிடலாம் என்றார். சரி என்று நானும் வீட்டிற்கு வந்து எனது தாய் தந்தையரிடம் விபரம் சொன்னேன். அவர்களும் அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது கொஞ்சம் குறைத்துகேள் என்று சொன்னார்கள். அதன்பிறகு நானும் விவசாய வேலைகளை பார்த்துவிட்டு பின்னர் மீண்டும் 14.12.2022ம் தேதியில் காலை சுமார் 11.30 மணிக்கு மயிலாடும்பாறை சர்வேயர் அலுவலகம் சென்று பிர்கா சர்வேயர் திரு.செல்வரங்கன் அவர்களை பார்த்து எனது அம்மா பெயரிலான பத்திரத்தை காட்டி உட்பிரிவு சம்மந்தமாக கேட்க அதற்கு அவர் நான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.15,000/- என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு முடியாது சார் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றேன். அதற்கு அவர் சரி என்று ரூ.1000/-குறைத்து ரூ.14,000/-யை நாளை 15.12.2022-ம் தேதி மதியத்திற்குள் கண்டிப்பாக கொண்டு வந்து மயிலாடும்பாறை அலுவலக்தில் அவரை பார்த்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இல்லைன்னா உங்கள் வேலை நடக்காது என்று கறாறாக சொல்லி விட்டார். நானும் சரி என்று வீட்டிற்கு வந்து தாய் தந்தையரிடம் சொல்லி யோசித்துப் பார்த்ததில் பிர்கா சர்வேயர் திரு.செல்வரங்கனுக்கு ரூ.14,000/- லஞ்சம் கொடுத்து எனது அம்மா பெயரிலான நிலத்திற்கு உட்பிரிவு செய்து பட்டா பெற என் மனம் விரும்பவில்லை. ஆகையால் உட்பிரிவு செய்து பட்டா ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் ரூ.14,000/- கேட்ட பிர்கா சர்வேயர் திரு.செல்வரங்கன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். பிர்கா சர்வேயர் திரு.செல்வரங்கன் என்னிடம் லஞ்சமாகக் கேட்ட பணம் ரூ.14,000/-ஐ நான் கொண்டு

வந்துள்ளேன். இத்துடன் எனது அம்மா பெயரிலான 12.05.2022-ம் தேதியிட்ட பத்திர நகல், அம்ம பெயரிலான விண்ணப்பம் பிர்கா சர்வேயர் வசம் நிலுவை உள்ளதற்கான இணையதள விண்ணப் நிலை நகல் மற்றும் 20.09.2022-ம் தேதியிட்ட ஒப்புகைச் சீட்டு நகல் ஆகியவற்ை இணைத்துள்ளேன். அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் இப்படிக்கு Sd/- XXXXX (ம.ராமேந்திரன், 14.12.2022)

Sir, Received this complaint on 14.12.2022 at 15.00 hrs. A confidential verificatio was conducted in respect of the complaint as well as the complainant through sources an found to be genuine and good respectively. The reputation of the accused was als verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint an after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilanc and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crim No.07/2022, u/s 7 of the PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 wa registered on 14.12.2022 at 16.00 hrs. Sd/- (C.Jeyapriya, Inspector of Police, V&AC Theni).

The original FIR along with the original complaint of Tr.M.Ramendran S/o.Machendran, Kumanan Thozhu, Andipatti Taluk, Theni District is sent to the Chie Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent t the superior officers concerned.

C. Jeyapriya 14/12/2022

(C.JAYAPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.